முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் கண்ணிச்சித்தர் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

26.02.2019, செவ்வாய்க்கிழமை

1. **கனிகிரி நாதனே அரங்கராசா**
**கருணை வடிவாக வந்த குருராசா**
**தணிகை வேலனாக தருமம் செய்கின்ற**
**தவராசனே ஆறுமுக அரங்கா**
2. அரங்கனே உன் பெருமை கூறி
அகிலமதில் **விளம்பி சாலின் திங்கள்**
**வரங்களென முன்னான்கீர் திகதி குசன் வாரம்**
**(விளம்பி வருடம் மாசி மாதம் 14ம் நாள் 26.02.2019, செவ்வாய்க்கிழமை)**
**வல்லமைபட நித்ய பிரசன்ன ஆசியை**
3. ஆசியை கண்ணிச்சித்தர் யானும்
அறிவிப்பேன் உலகோர் நலம்பெற
நேசக்கரம் கொண்டுமே தருமத்தை
நிலவுலகமெங்கும் அரங்கன் செய்து வர
4. வருகின்ற அன்னதான பலத்தை
வையகமெங்கும் மக்கள் தொடர
முருகா என மக்களெல்லாம் முழங்கி
முழுமை ஞான மார்க்க வழிபாடு தொடர
5. தொடரவே உலகமெங்கும் மக்களுக்கு
தூய மனம் சமாதான குணமும்
இடரென்பது இல்லாத உயர் பலமும்
எங்கும் முருகன் ஆளுமை என்கின்ற
6. என்கின்ற திடசிந்தையும் அறிவும்
எதிலும் தெளிவும் கண்டு மக்கள்
நன்மைபட வாழ்வு வளமுடன்
ஞானபலமும் கொண்டு சிறப்பர்
7. சிறப்பு தரும் அரங்க மகானே
சேவை கொண்டே உலகை மாற்றும்
சிறப்புமிக்க ஞானியே தேசிகனே
செப்பிடுவேன் உன் தலைமை கொண்ட மக்களும்
8. மக்களுடன் தலைமை ஏற்ற தேசமும்
மண்ணுலகில் வளர்ச்சி பெற்று
தேக்கமிலா முதன்மை நிலை அடைந்து
தெய்வ பலமிக்க நிலை காண்கும்
9. காண்கவே அரங்க மகானின்
கருணை பலம் கொண்டுமே
உண்மைபட மாற்றமும் பலமும்
உயர்வுபட வருங்கால ஞானிகளாக

10. ஞானிகளாக தேர்வு காணும் மக்களே
நன்மை கூடிட ஞானவழி தேறிட
இனிமைபட உயர் வழிபாடுதனை
ஏழாம் படை வீடு வந்து செய்துவர

11. வருகவே வையகம் மாறும்
வருகவே கலியுகம் தேறும்
முருகன் அருள் தேசமாக மாறும்
மொழிந்திட்ட நித்ய பிரசன்ன ஆசி முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் கண்ணிச்சித்தர் அருளிய நித்ய பிரசன்ன ஆசி நூலின் சாரம் :**

கனிகிரிநாதன் முருகப்பெருமானே, முருகப்பெருமானின் அவதாரமே ஆறுமுக அரங்கமகா தேசிகனே கருணையே வடிவமாக இவ்வுலகினில் அவதாரம் செய்து, கலியுகத்தின் பிடியினுள் அகப்பட்டு துன்பப்படுகின்ற மக்களை வழிநடத்தி காக்க வந்திட்ட மகா குருவே குருராசனே அரங்கமகா தேசிகனே திருத்தணிகை வாழ் முருகப்பெருமானாகவே தாம் தோன்றி உலகினில் அளவற்ற தர்மங்களை செய்து தர்மத்தை காக்கும் தர்மதலைவனே தவராசனே ஆறுமுக அரங்கமகா தேசிகனே அற்புதமான உமது பெருமைகளை உலகமெலாம் கூறியே உலக நலன் கருதி **விளம்பி வருடம் மாசி மாதம் 14ஆம் நாள் 26.02.2019, செவ்வாய்க்கிழமையான** இன்றைய தினமதனிலே நித்ய பிரசன்ன ஆசி நூல்தனையே கண்ணிச்சித்தர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் கண்ணிச்சித்தர்.

உலக மக்களிடத்து அளவிலாது அன்பு கொண்டு மக்கள் துன்பம் துடைத்து காத்திடவே தர்மங்களை உலகமெங்கும் தாராளமாய் ஆறுமுக அரங்கமகா தேசிகனார் செய்து வருகின்றார். வருகின்ற அன்னதான பலத்தினை மக்களுக்கு அளித்து மக்களெல்லாம் தர்மம் செய்திட தூண்டியே அரங்கனும் வழிநடத்தி வர உலக மக்களெல்லாம் ஆறுமுக அரங்கனின் தர்மங்களை ஏற்று தொடர்ந்து செய்தும், தர்மத்தலைவன் ஞானத்தலைவன் முருகப்பெருமானின் திருநாமங்களை முருகா முருகா முருகா என மனம் உருகி ஜெபித்து முழுமை ஞானம் பெறுகின்ற உண்மை ஞானவழியில் சென்று முருகப்பெருமானின் வழிபாடுகளை தொடர்ந்து செய்து வரவர, உலகமெங்கும் மக்களுக்கு தூய மனம் பெருகி சமாதான உணர்வும் பெருகி துன்பங்கள் ஏதும் இல்லாத உயர் ஞான பலம்தனை பெற்று உலகமெங்கும் முருகப்பெருமானின் அருளாட்சி நடக்கிறது எனும் திடமான சிந்தனையும் சிறப்பான அறிவும் பெருகி எங்கும் எச்செயல்களிலும், எந்த சூழ்நிலையிலும் தெளிவாக சிந்தித்து செயலாற்றி மக்களெல்லாம் அமைதியும் நன்மையும்மிக்க நல்வாழ்வை நலமுடன் வாழ்வதோடு ஞானபலமும் பெற்று ஞானவாழ்வினையும் வாழ்ந்து சிறப்படைவார்கள்.

எல்லாவிதமான சிறப்புகளையும் தந்தருளும் ஆறுமுக அரங்கமகா தேசிகனே உலக மக்களுக்கு தொண்டுகள் செய்தே உலக மக்களை மாற்றும் சிறப்புமிக்க மகா ஞானியே, மகா தேசிகனே உமது உத்தமமான தலைமையை ஏற்றுக் கொண்ட மக்களுடன் உமது தலைமையை ஏற்றுக்கொண்ட நாடும் இவ்வுலகினில் அற்புதமான வளர்ச்சியினை விரைந்து அடைந்து தடையின்றி முதன்மை நிலையை பெற்று தெய்வபலம்மிக்க திருநாடாய் திகழ்ந்திடுமப்பா.

உத்தம மகா ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் கருணையைப் பெற்ற மக்களே அரங்கன் அருளால் உண்மையான ஞானமாற்றமும் ஞானபலமும் உயர்வாய் பெற்று வருங்கால ஞானிகளாக ஆக இருக்கின்ற அரங்கனின் அன்பு சீடர்களே அரங்கனின் அன்பு சீடர்கள் என தேர்வு பெற்று ஞானிகளாக ஆகிட தேர்வு பெற்ற மக்களே நீங்களெல்லாம் உங்களது வாழ்வினில் நன்மைகள் பெருகிட ஞானமார்க்கத்தில் தேறிட மனம் உருகி அன்புடன் உயர் ஞான வழிபாடுகளை பயபக்தியுடன் ஏழாம் படை வீடு துறையூர் ஓங்காரக்குடிலினை நாடி வந்து வழிபாடுகளை செய்து வர, இந்த உலகமே மாற்றமடையும். நீங்களெல்லாம் ஒன்று கூடி வந்து வழிபாடுகளை செய்திட்டால் இந்த கலியுகம் தேறிவிடும், இந்த தேசமே முருகப்பெருமானின் அருள் பெற்ற அருள் தேசமாக மாறிடும் என தமது நித்ய பிரசன்ன ஆசி நூல் மூலம் உரைக்கின்றார் மகான் கண்ணிச்சித்தர்.

–சுபம்–